# 100. பண்புடைமை

(நல்லியல்புகள் உடையவராக விளங்குதல்)

# Courtesy

991. எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

எல்லோரும் எளிதாகக் காணத்தக்க வகையில் பழகுவதால் பண்புடைமை ஆகிய போற்றுதலுக்குரிய நல்ல நெறியை விரைவில் மேற்கொள்ளலாம் என்று சான்றோர் கூறுவர்!

**Who easy access give to every man, they say,**
**Of kindly courtesy will learn with ease the way.**

If one is easy of access to all, it will be easy for one to obtain the virtue called goodness

992. அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

அன்புடையவராக வாழ்தலும் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவராகத் திகழ்தலும் பண்புடைமை என்று சான்றோர் போற்றும் நெறிமுறைக்கு உரிய இரண்டு நல்ல வழிகள் ஆகும்!



**Benevolence and high born dignity,**
**These two are beaten paths of courtesy.**

Affectionateness and birth in a good family, these two constitute what is called a proper behaviour to all.

993. உறுப்பொத்தல் மக்கள்ஒப்( பு ) அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

உடல் உறுப்புகளால் மட்டும் நிகராக அமைவது நல்ல மக்களுடன் ஒத்திருப்பதாகக் கூறவியலாது! உயிருடன் பொருந்தத்தக்க பண்பினால் ஒத்திருப்பதே உண்மையான ஒப்பு எனலாகும்.

**Men are not one because their members seem alike to outward view;**
**Similitude of kindred quality makes likeness true.**

Resemblance of bodies is no resemblance of souls; true resemblance is the resemblance of qualities that attract.

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

நெறிமுறைகளையும் நன்மை செய்தலையும் விரும்புவதால் பிறர்க்குப் பயன்படும் சான்றோர் பண்பை உலக மக்கள் போற்றிப் புகழ்வர்!

**Of men of fruitful life, who kindly benefits dispense,**
**The world unites to praise the 'noble excellence.'**

The world applauds the character of those whose usefulness results from their equity and charity.

995. நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

விளையாட்டில் கூடப் பிறரை இகழ்ந்து பேசுவது அவர்களுக்குத் துன்பம் தருவது ஆகும்! பிறர் உள்ளங்களை அறிந்து உணர்ந்து நடப்பவர் பகை பாராட்டுவோரிடமும் பண்புள்ள சொற்களையே பயன்படுத்துவர்!!

**Contempt is evil though in sport They who man's nature know,**
**E'en in their wrath, a courteous mind will show.**

Reproach is painful to one even in sport; those (therefore) who know the nature of others exhibit (pleasing) qualities even when they are hated.

996. பண்புடையார்ப் பட்டுண்(டு) உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

உலக நடைமுறை பண்புமிக்க சான்றோரைச் சார்ந்து விளங்குவதால் அது தடையின்றி இயங்குகின்றது. பண்புடையோரின் சார்பு இல்லாது போனால், உலகம் மண்ணுக்குள் மறைந்து அழிந்து ஒழிந்து விடும்!!

**The world abides; for 'worthy' men its weight sustain**
**Were it not so, 'twould fall to dust again.**

The (way of the) world subsists by contact with the good; if not, it would bury itself in the earth and perish.

997. அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கள்பண்பு இல்லா தவர்.

மக்களாக வாழ்வதற்குரிய பண்பு இல்லாதவர், மரம் அறுக்கும் அரத்தைப் போன்று அறிவில் கூர்மையானவர். ஆனாலும், அவர்கள் ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பாகவே கருதப்படுவர்!

**Though sharp their wit as file, as blocks they must remain,**
**Whose souls are void of 'courtesy humane'**

He who is destitute of (true) human qualities (only) resembles a tree, though he may possess the sharpness of a file.

998. நண்பாற்றார் ஆகி நயம்இல செய்வார்க்கும்
பண்பாற்றார் ஆதல் கடை.

நட்புக்கு உரியவராக விளங்காமல் தீமையே செய்பவர்க்கும் பண்பாளராக அமைந்து நல்லது செய்யாது போனால் பண்புடைய சான்றோர்க்கு அச்செயல் இழிவாகும்!

**Though men with all unfriendly acts and wrongs assail,**
**'Tis uttermost disgrace in 'courtesy' to fail.**

It is wrong (for the wise) not to exhibit (good) qualities even towards those who bearing no friendship (for them) do only what is hateful.

999. நகல்வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்( று ) இருள்.

பிறருடன் கூடிக் கலந்து பழகி மகிழும் திறமையில்லாதவர்க்கு மாபெரும் இவ்வுலகம் பகற்பொழுதிலும் கூட இருள் சூழ்ந்ததாகவே தோன்றும்!

**To him who knows not how to smile in kindly mirth,**
**Darkness in daytime broods o'er all the vast and mighty earth.**

To those who cannot rejoice, the wide world is buried darkness even in (broad) day light.

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலம்தீமை யால்திரிந் தற்று.

பண்பு இல்லாதவன் அடைந்த பெரிய செல்வம் எவருக்கும் பயன்படாது கெட்டழியும்! நல்லாவின் பால் துலக்காத பாண்டத்தின் குற்றத்தால் திரிந்து போவது கருதத்தக்கது!!

**Like sweet milk soured because in filthy vessel poured,**
**Is ample wealth in churlish man's unopened coffers stored.**

The great wealth obtained by one who has no goodness will perish like pure milk spoilt by the impurity of the vessel.